# Sample Question paper ( Tamil )

**ñ£FK Mù£ˆî£œ - îl›**

**å¡ðî£‹ õ°Š¹ (Class - IX )**

***ஏப்ரல் 2012 - செப்டம்பர் 2012***

**I - TERM (April 2012 - SEP 2012)**

Max. Marks : 90
மொ.மதிப்பெண் கள்: 90

Time Allowed : 3 Hours
கால அளவு : 3 மணி

The question paper is diveded in to four sections:
**இக் கேள்வித் தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.**

| | | |
|---|---|---|
| **SECTION : A**<br>பிரிவு: அ | Reading comprehension<br>படித்தல் (உரைநடைப் பகுதி) | - 15 Marks<br>-15 மதிப்பெண்கள் |
| **SECTION : B**<br>பிரிவு: ஆ | **Writing**<br>எழுதுதல் | - 20 Marks<br>-20 மதிப்பெண்கள் |
| **SECTION : C**<br>பிரிவு: இ | Grammar<br>இலக்கணம் | - 15 Marks<br>-15 மதிப்பெண்கள் |
| **SECTION : D**<br>பிரிவு: ஈ | **Literature / Text Books**<br>இலக்கியம்/தமிழ்ப் பாடநூல் | - 40 Marks<br>-40 மதிப்பெண்கள் |

---

★ எல்லா வினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்கப்பட வேண்டும்.

★ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மதிப்பெண்கள் அதனதன் இடத்தில் குறிப்பிடப் பட்டுள்ளன.

## பிரிவு - அ

படித்தல் - 15 மதிப்பெண்

1. **கீழ் வரும் பத்தியைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக.** **(5)**

நாட்டு வைத்தியம் என்று பொதுவாகக் குறிப்பிடுவது மூன்று. ஒன்று சித்த மருத்துவம்; இரண்டு ஆயுர் வேதம்; மூன்று யுனானி. சித்த

மருத்துவத்துக்கு மொழி தமிழ்; ஆயுர் வேதத்திற்கு மொழி வட மொழி; யுனானிக்கு மொழி உருது. யுனானிக்குத் திசை மேற்கு; ஆயுர் வேதத்திற்குத் திசை வடக்கு; சித்த வைத்தியத்திற்குத் திசை தெற்கு. தமிழ் மருந்துகள் பெரும்பாலும் பொடியும் கஷாயமுமாக இருக்கும். இதனைப் 'பசுபம்' என்றும் 'கசாயம்' என்றும் சொல்வர். ஆயுர் வேத வைத்தியம் பெரும்பாலும் தைலமும் திராவகமுமாக இருக்கும். யுனானி மருந்துகள் பெரும்பாலும் அல்வாவும் லேகியமுமாக இருக்கும். இரும்பு, வெள்ளி, தங்கம், செம்பு முதலிய உலோகங்கள் ஒன்பது; முத்து, மணி, பவழம் முதலிய இரத்தினங்கள் ஒன்பது. வீரம், பூரம் முதலிய பாசாணங்கள் ஒன்பது. இதனை முறையே நவலோகம், நவ இரத்தினம். நவ பாசாணம் என்பர். இந்த மூவொன்பது இருபத்தேழையும் பசுபமாக்கும் முறை சித்த வைத்தியத்தில் மட்டுமே உண்டு.

<u>**வினாக்கள்:**</u>

1. சித்த மருத்துவத்துக்குரிய மொழி
   - அ). தெலுங்கு
   - ஆ). வட மொழி
   - இ). தமிழ்
   - ஈ). உருது

2. 'ஆயுர் வேத வைத்தியம் பெரும்பாலும்
   - அ).அல்வாவும் லேகியமுமாக இருக்கும்
   - ஆ). பொடியும் கசாயமுமாக இருக்கும்
   - இ). தைலமும் திராவகமுமாக இருக்கும்
   - ஈ). திராவகமும் லேகியமுமாக இருக்கும்

3. வீரம், பூரம் முதலியனவற்றை
   - அ). நவலோகம் என்பர்
   - ஆ). நவபாசாணம் என்பர்
   - இ). நவ இரத்தினம் என்பர்
   - ஈ). நவரசம் என்பர்

4. யுனானி வைத்தியத்திற்குத் திசை
   - அ). மேற்கு
   - ஆ).கிழக்கு
   - இ).தெற்கு
   - ஈ). வடக்கு

5. பசுபமாக்கும் முறை ------- வைத்தியத்தில் மட்டுமே உண்டு.

அ). யுனானி

ஆ). சித்த வைத்தியம்

இ). ஆயுர் வேதம்

ஈ). அலோபதி

2. கீழ் வரும் பத்தியைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக. (5)

நிலத்தை உழுது, சமப்படுத்தி, நீர் பாய்ச்சி பயிரிடுவதற்கேற்ற வகையில் பக்குவப் படுத்துவதற்குப் `பக்குவப் படுத்துதல்' என்று பெயர். மக்களின் மனமாகிய நிலம் பண்படுத்தப்பட்டால் ``பண்பாடு'' வளர்கிறது. ஆங்கிலத்தில் முன்னது `cultivation' பின்னது `culture'. மக்கள் மனதில் உள்ள அழுக்குகள் அகல, அருங்குணங்கள் பெருக, மக்கள் மக்களாக வாழும் பண்பட்ட நிலையில் `பண்பு' ஒளி விடுகிறது; பண்பாடு சிறக்கிறது. கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்னும் மாவேந்தன், பாவேந்தனும் ஆவான். உலகம் அழியாமல் இன்றளவும் சிறப்புடன் வர்ழ்வதற்குரிய காரணம் என்ன? என்று சிந்தித்தான். சிந்தித்து, உயர்ந்த பண்புகளைப் பெற்ற சான்றோர் வாழ்ந்து கொண்டிருப்பதால் தான் உலகம் இன்றளவும் இயங்கிக் கொண்டிருக்கிறது என்னும் சீரிய கருத்தினை ஆணித்தரமாக எடுத்துக் கூறினான். தன்னலம் இல்லாத பொது நலம் பேணும் உயர்ந்த பண்பாளர்களால் தாம் இவ்வுலகம் இழங்கி வருகிறது என்கிறான் இளம்பெருவழுதி.

<u>**வினாக்கள்:**</u>

1. மனம் - இதற்குக் கூறப்பட்டுள்ள உவமை

அ).பண்பு

ஆ). பயிர்

இ). நிலம்

ஈ). நலம்

2. உலகம் இன்றளவும் அழியாமல் இயங்கிக் கொண்டிருக்கக் காரணம்

அ). உயர்ந்த பண்புகளையுடைய சான்றோர் வாழ்வது

ஆ). மாவேந்தர்கள் வாழ்வது

இ). பாவேந்தர்கள் வாழ்வது

ஈ). சிந்தனையாளர்கள் வாழ்வது

3. `culture´ என்ற ஆங்கிலச் சொல் குறிக்கும் தமிழ்ச்சொல்

அ). பண்படுத்தல்

ஆ).பண்பாடு

இ). பண்பு

ஈ). சிறப்பு

4. `பண்பு´ ஒளிவிடுவது

அ). மக்கள் மாக்களாக வாழும் போது

ஆ). மக்கள் மக்களாக வாழும் போது

இ). மக்கள் செல்வர்களாக வாழும் போது

ஈ). மக்கள் கல்வி கற்கும் போது

5. இப்பத்தியில் `சிறந்த´ என்பதன் நேர்ப்பொருள் தரும் மற்றொரு சொல்

அ). உயரிய

ஆ). பண்பு

இ). சீரிய

ஈ). பெருக

**3. கீழ் வரும் பத்தியைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக. (5)**

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராய்த் திகழ்ந்தவர் நக்கீரர் என்ற நற்றமிழ்ப் புலவர். அவர் இயற்றிய `திருமுருகாற்றுப்படை´ பத்துப்பாட்டு என்னும் தொகை நூலின் முதற்பாட்டாய் இலங்குகின்றது. முருகப் பெருமான் கோயில் கொண்ட ஆறுபடை வீடுகளின் பெருமைகளை அழகாகக் கூறுகின்ற அந்நூல், அருள் நூலாகவும் கருதப்படுகின்றது. இறையனால் களவியல் என்னும் அகப்பொருள் நூலுக்கு அவர் எழுதிய உரை, சங்க காலத்து உரைநடைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். பழைய இலக்கிய இலக்கணங்களுக்கு உரை செய்த ஆசிரியர்களுள் ஒருவராகிய நச்சினார்க்கினியரும் மதுரை மாநகரத்தைச் சேர்ந்தவர். ஐம்பெருங் காவியங்களுள் ஒன்றாகிய சிந்தாமணிக்கும் `கற்றறிந்தோர் ஏத்தும் கவி´ என்று புகழப்பட்ட கலித்தொகைக்கும், பத்துப்பாட்டிற்கும் தொல்காப்பியத்திற்கும்

சிறந்த உரை செய்த நச்சினார்க்கினியரின் பெருமை தமிழ் உள்ளளவும் அழியாததாகும்.

<u>வினாக்கள்:</u>

1. 'பத்துப்பாட்டு' என்னும் தொகை நூலின் முதற்பாட்டு
   - அ). திருமுருகாற்றுப்படை
   - ஆ).குறிஞ்சிப்பாட்டு
   - இ). சிந்தாமணி
   - ஈ). கலித்தொகை

2. அறுபடை வீடுகளில் எழுந்தருளியிருக்கும் இறைவன்
   - அ). சிவன்
   - ஆ). திருமால்
   - இ). புத்தர்
   - ஈ). முருகன்

3. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று
   - அ). கலித்தொகை
   - ஆ). சிந்தாமணி
   - இ). திருமுருகாற்றுப்படை
   - ஈ). தொல்காப்பியம்

4. மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராய் விளங்கியவர்
   - அ). கம்பர்
   - ஆ).நக்கீரர்
   - இ).தொல்காப்பியர்
   - ஈ). வள்ளுவர்

5. அருள் நூலாகக் கருதப்படுவது
   - அ). இறையனார் களவியல்
   - ஆ).சிந்தாமணி
   - இ). திருமுருகாற்றுப்படை
   - ஈ).கலித்தொகை

## பகுதி - ஆ

1. உங்கள் ஊருக்குப் பேருந்து வசதி செய்து தர வேண்டிப் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநருக்கு ஒரு கடிதம் எழுதுக (8)

(அல்லது)

அண்மையில் நீவிர் கண்டு களித்த பொருட்காட்சியின் சிறப்பினை விவரித்து நண்பருக்கு ஒரு மடல் வரைக.

★ [உமது முகவரி: இராமு/சீதா, 28. நேரு நகர், மதுரை. எனக் கொள்க.]

**2. ஏதேனும் ஒரு பகுதியிலுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக. (8)**

அ). முன்னுரை - நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்- உடற்பயிற்சி - நல்லுணவு - வெளியுணவுகளைத் தவிர்ப்பது - சுகாதாரம் பேணல் - முடிவுரை.

ஆ). நூல்கள் நம் நண்பர்கள் - நூல்களின் பயன்கள் - நூலகங்களின் தேவை - நூலக அமைப்பு - பயன்படுத்தும் விதம் - நூலக வகைகள் - முடிவுரை.

இ). ஒழுக்கத்தின் மேன்மை - ஒழுக்கப் பண்புகள் - வாய்மையின் சிறப்பு - அரிச்சந்திரன் கதை - புற ஒழுக்கம் - முடிவுரை.

3. உமது பகுதியில் நடைபெற்ற இரத்த தான முகாம் குறித்து அறிக்கை ஒன்று எழுதுக. (4)

(அல்லது)

உமது பள்ளியில் நடைபெற்ற 'அறிவியல் கண்காட்சி' குறித்து அறிக்கை ஒன்று எழுதுக.

## பகுதி - இ

1. சான்று தருக. (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) (3)

i). தானியாகு பெயர்

அ). கழல் பணிந்தான்

ஆ). சமையல் கற்றேன்

இ). இந்தியா வென்றது

ஈ). கார் அறுத்தான்

ii). முதனிலைத் தொழிற் பெயர்

அ). முருகன் உதை வாங்கினான்

ஆ).சூடு தாங்காமல் அலறினான்

இ). வள்ளி ஆடல் கலையில் வல்லவள்

ஈ). முருகன் பரிசு பெற்றான்.

iii). திணை வழு

அ). கண்ணன் வந்தார்

ஆ). கண்ணன் வந்தாள்

இ). கண்ணன் வந்தது

ஈ). கண்ணன் வருவான்

iv). செய்யுளிசை அளபெடை

அ). விடாஅர்

ஆ). கெடுப்பதூஉம்

இ). போன்ம்

ஈ). எங்கிறைவன்

v). வடிவப் பண்புப் பெயர்

அ). வட்ட நிலா

ஆ). வெண்ணிலா

இ). கருங்காகம்

ஈ). வெண் தாடி

**2. நிரப்புக (எவையேனும் மூன்றை மட்டும்) (3)**

i). 'பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வருவது ------ எனப்படும்.

அ). சந்தி

ஆ). சாரியை

இ). இடைநிலை

ஈ). விகாரம்

ii). இடம் பொருளுக்கு ஆகி வருவது ---- ஆகும்.

அ). கருவியாகு பெயர்

ஆ). தானியாகு பெயர்

இ). இடவாகு பெயர்

ஈ). கருத்தாவாகு பெயர்

iii). வினைமுற்று, ஒரு வினையைக் குறிக்காமல் வினையாற்றியவரைக் குறிப்பது-------

அ). தெரிநிலை வினைமுற்று

ஆ). குறிப்புவினை முற்று

இ). தொழிற்பெயர்

ஈ). வினையாலணையும் பெயர்

iv). யாம் என்னும் தன்மைப் பெயர் வேற்றுமை உருபு ஏற்கும் போது ---- எனத் திரியும்.

அ). நாம்

ஆ). தாம்

இ). நும்

ஈ). எம்

v). செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசை தருவதற்காகக் குறில் நெடிலாக மாறி அளபெடுப்பது ----------

அ). சொல்லிசை அளபெடை

ஆ). ஒற்றளபெடை

இ). செய்யுளிசை அளபெடை

ஈ). இன்னிசை அளபெடை

**3. கூறியவாறு செய்க. (எவையேனும் மூன்றை மட்டும்) (3)**

i). பூப்பந்து போட்டியில் இந்தியா வென்றது (ஆகுபெயரை எழுதுக)

அ). பூப்பந்து

ஆ). பூப்பந்துப் போட்டி

இ). இந்தியா

ஈ). இந்தியா வென்றது

ii). கேட்டான்(பகுதியை எழுதுக)

அ). கேட்ட

ஆ).கேடு

இ). கேள்

ஈ). கெட்ட

iii). குதிரை கத்தும் (வழு நீக்குக)

அ). குதிரை கனைக்கும்

ஆ). குதிரை ஓலமிடும்

இ). குதிரை ஊளையிடும்

ஈ). குதிரை கூவும்

iv). பெற்றான் (தொழிற்பெயராக்குக)

அ). பெறுக

ஆ). பெறுவான்

இ). பெறுதல்

ஈ). பெறுகிறான்

v). காட்சி(பிரித்து எழுதுக)

அ). கா+சி

ஆ). காட்+சி

இ). காண்+சி

ஈ). மேற் கூறிய மூன்றும் இல்லை

**4. இலக்கணக் குறிப்பு தருக. (மூன்றுக்கு மட்டும்) (3)**

i).குடிதழீஇக் கோல் ஓச்சும்

அ). ஒற்றளபெடை

ஆ). சொல்லிசை அளபெடை

இ). இன்னிசை அளபெடை

ஈ). செய்யுளிசை அளபெடை

ii).வீணை கேட்டு மகிழ்ந்தேன்.

அ). கருவியாகு பெயர்

ஆ). காரியவாகு பெயர்

இ).கருத்தாவாகு பெயர்

ஈ). உவமையாகு பெயர்

iii). மாட்சி

அ). தொழிற் பெயர்

ஆ).வினைச் சொல்

இ). பண்புப் பெயர்

ஈ). வினையாலணையும் பெயர்

iv). நாங்கள் செல்கிறார்கள்

அ). பால் வழு

ஆ). இட வழு

இ). கால வழு

ஈ). திணை வழு

v). ஆதிரையன்

அ).பெயர்ப் பகாப்பதம்

ஆ).பெயர்ப் பகுபதம்

இ). வினைப் பகாப்பதம்

ஈ). வினைப் பகுபதம்

**5. சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க. (மூன்று மட்டும்) (3)**

i) அ). இடப்பெயர், பொருளுக்கு ஆகி வருவது தானியாகுபெயர்.

ஆ). இடப்பெயர், பொருளுக்கு ஆகி வருவது பொருளாகுபெயர்.

இ). இடப்பெயர், பொருளுக்கு ஆகி வருவது இடவாகுபெயர்.

ஈ). இடப்பெயர், பொருளுக்கு ஆகி வருவது உவமையாகுபெயர்.

ii). தாங்கள் என்னும் படர்க்கைப் பெயர் வேற்றுமை உருபு ஏற்கும் போது

அ). தங்கள் எனத் திரியும்.

ஆ). தம் எனத் திரியும்.

இ). தான் எனத் திரியும்.

ஈ). நும் எனத் திரியும்.

iii). அ). எறுது வண்டியை இழுத்தன.

ஆ). எருது வண்டியை இழுத்தது.
இ).எருதுகள் வண்டியை இழுத்தது.
ஈ).எருது வண்டி இழுத்தது.

iv). அ). நான் வந்தேன்.
ஆ). நான் வருவான்.
இ). நாண் வந்தது.
ஈ). நான் வந்தது.

v). அ).அளபெடை மூன்று வகைப்படும்.
ஆ).அளபெடை இரண்டு வகைப்படும்.
இ).அளபெடை நான்கு வகைப்படும்.
ஈ). அளபெடை ஐந்து வகைப்படும்.

பிரிவு – ஈ

**1. கீழ் வரும் பத்தியைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக. (5)**

இலங்கையில் வாழும் தமிழர்களில் தொண்ணூற்றைந்து விழுக்காட்டினர் தொடக்கப்பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை தமிழிலேயே கல்வி பயில்கின்றனர். புதுச்சேரி, சிங்கப்பூர், மலேசியா, பிஜித் தீவுகள், தென் அமெரிக்கா, கனடா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் தமிழ் ஒரு பாடமாக்கக் கற்பிக்கப்படுகிறது. பல நாடுகளுக்கும் சென்ற தமிழர்கள், தம் வருவாயை மட்டும் நோக்கமாகக் கொள்ளாமல் தமிழை வளர்க்கும் செயல்களில் ஈடுபட்டு வருவது அவர் தம் மொழிப்பற்றைக் காட்டுகிறது. இருபத்து நான்கு மணி நேரமும் ஊடகங்களில் தமிழ் நிகழ்ச்சிகளைக் கேட்கவும் காணவும் ஆங்காங்கே வாழும் தமிழர்கள் அந்தந்த நாட்டு அரசுகளிடம் அனுமதி பெற்றுள்ளனர். இந்த ஊடகங்கள் தமிழர்களை இணைக்கும் பாலங்களாகத் திகழ்வதோடு மொழியை மறவாமல் காக்கவும் மேம்படச் செய்யவும் உதவி புரிகின்றன. அச்சு, ஒலி, ஒளி ஊடகங்களைத் தமிழர்கள் உலகெங்கும் நடத்தி வருகின்றனர்.

<u>**வினாக்கள்:**</u>

1. இலங்கைத் தமிழர்களுள் --- விழுக்காட்டினர் பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை தமிழலேயே கல்வி கற்கின்றனர்.

அ). 90

ஆ).85

இ). 75

ஈ). 95

2. வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் வருவாயைக் குறிக்கோளாகக் கொள்ளாமல் தமிழை வளர்ப்பது அவர்களின்,

அ). சோம்பேறித்தனத்தைக் காட்டுகிறது.

ஆ). மொழிப்பற்றைக் காட்டுகிறது.

இ). மொழி வெறியைக் காட்டுகிறது.

ஈ). மொழியார்வமின்மையைக் காட்டுகிறது.

3. தமிழர்களை இணைக்கும் பாலங்கள்

அ). ஊடகங்கள்

ஆ). அரசுகள்

இ). மொழிகள்

ஈ). கலைகள்

4. மொழியை மறவாமல் காக்க உதவுவன

அ). மக்களின் வருவாய்

ஆ). மக்களின் ஆர்வம்

இ).அந்தந்த நாட்டு அரசுகள்

ஈ). ஊடகங்கள்

5. அச்சு, ஒலி, ஒளி ஊடகங்களை உலகமெங்கும் நடத்தி வருபவர்கள்

அ). தமிழக அரசினர்

ஆ). இந்திய அரசியல்வாதிகள்

இ). தமிழர்கள்

ஈ). ஊடகவியலார்கள்

2. கீழ் வரும் பத்தியைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக. (5)

கல்வெட்டுகளும் செப்பேடுகளும் இலக்கியங்களும் பழங்கால வரலாற்றை அறிய உதவும் காலக் கண்ணாடிகள். ஆனால், ஒரு நாட்குறிப்பு அக்கால நிகழ்வுகளை நமக்கு எடுத்துரைக்கும் வரலாற்று ஆவணமாகத் திகழ்கிறது. நாட்குறிப்பு என்பது தனிமனிதனின் ஒருநாளைய நிகழ்வுகளை மட்டும் பதிவு செய்யாமல் குறிப்பிட்ட நாளில் நடந்த சமூக மாற்றங்கள், அரசியல் நிகழ்வுகள் உலகின் சீரிய நிகழ்வுகள், பேரிடர்கள் முதலானவற்றையும் பதிவு செய்யப் பயன்பட வேண்டும். அவ்வாறு அமைந்ததால்தான் ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு ஓர் இலக்கியமாகவும் வரலாற்று ஆவணமாகவும் மதிக்கப் பெறுகிறது. ஆனந்தரங்கர், சென்னைப் பெரம்பூரில் 1709 - ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 30 ஆம் நாள் பிறந்தார். `எம்பார்' என்பாரிடம் கல்வி பயின்றார். இவரின் தந்தை திருவேங்கடம் மைத்துனர் நைனியப்பரின் வேண்டுகோளுக்கு இணங்கப் புதுவையில் குடியேறினர். அங்கு அரசுப் பணியில் உதவியாளராகச் சேர்ந்து, நாளடைவில் திவானாகப் பதவி உயர்வு பெற்றார்.

**வினாக்கள்:**

1. பழங்கால வரலாற்றை நாம் அறிய உதவுவது
   அ). கண்ணாடிகளும் பொருட்களும்
   ஆ). ஆவணங்களும் அரசாங்கமும்
   இ). சமூக மாற்றங்களும் பேரிடர்களும்
   ஈ). கல்வெட்டுகளும் செப்பேடுகளும்

2. ஆனந்தரங்கர் பிறந்த ஊர்
   அ). சென்னை
   ஆ). பம்பாய்
   இ). தில்லி
   ஈ). கல்கத்தா

3. இப் பத்தியில் `மாதம்' என்ற சொல்லின் நேர்ப்பொருள் தரும் சொல்
   அ).திங்கள்
   ஆ). செவ்வாய்
   இ). பௌர்ணமி
   ஈ). மார்கழி

4. ஆனந்தரங்கருக்குக் கல்வி பயிற்றுவித்தவர்
   அ). தந்தையார்
   ஆ). நைனியப்பர்
   இ). தாயார்

ஈ). எம்பார்

5. திவானாகப் பதவி உயர்வு பெற்றவர்

அ). ஆனந்தரங்கர்

ஆ). நைனியப்பர்

இ). திருவேங்கடம்

ஈ). எம்பார்

**3. கீழ்க்காணும் பாடல் அடிகளைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு உரிய விடைகளை எழுதுக. (4)**

'தம்பி விதுரனை மன்ன னழைத்தான்
தக்க பரிசுகள் கொண்டினி தேகி
எம்பியின் மக்க ளிருந்தர சாளும்
இந்திர மாந்தர் சார்ந்தவர் தம்பால்
''கொம்பினை ஒத்த மடப்பிடி யோடும்'
கூடியிங் கெய்தி விருந்து களிக்க
நம்பி யழைத்தனன் கௌரவர் கோமான்
நல்லதோர் நுந்தை'' யெனவுரை செய்வாய்'

**வினாக்கள்:**

1. இப்பாடலடிகளில் மன்னன் என்ற சொல்லால் குறிப்பிடப்படுபவர்

அ). விதுரன்

ஆ). திருதராட்டிரன்

இ). இந்திரன்

ஈ). தருமர்

2. மடப்பிடி - இச்சொல் யாரைக் குறிக்கிறது.

அ). கௌரவரை

ஆ). விதுரரை

இ). பாஞ்சாலியை

ஈ). சீதையை

3. நுந்தை - இச்சொல்லின் பொருள்

அ). உன் தம்பி

ஆ). உன் சகோதரன்

இ). உன் தந்தை

ஈ). உன் அரசன்

4. 'கோமான்' என்பதன் நேர்ப்பொருள் குறிக்கும் சொல்

அ). அரசன்

ஆ). சிற்றரசன்

இ).பேரரசன்

ஈ). குறுநில மன்னன்

**4. விடையளிக்க. (எவையேனும் இரண்டனுக்கு மட்டும்) (10)**

அ). திராவிட மொழிகளுள் தமிழ்மொழி பெறுமிடம் எது?

ஆ).இக்கால மரபுக் கவிஞர் எவரேனும் நால்வரின் கல்வித் தரத்தை விளக்குக.

இ). தமிழகத்தின் பழங்காலத் துறைமுகங்கள் மற்றும் அங்கு நடைபெற்ற வணிகம் பற்றி விளக்குக.

ஈ).உலகளாவிய தமிழர்தம் மொழி நலை, பண்பாட்டு நிலையை விவரிக்க.

உ). ஆனந்தரங்கர் பெற்ற சிறப்புகள் யாவை?

**5. எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க. (8)**

அ). சிறுபஞ்ச மூலம் வனப்புகளாகக் கூறுவனவற்றை தொகுத்து எழுதுக.

ஆ). குறுந்தொகைப் பாடலில் தலைவனது நாடும் நட்பும் எங்ஙனம் சிறப்பிக்கப்படுகின்றன?

இ). கேள்விச் செல்வத்தினால் பெறப்படும் நன்மைகள் யாவை?

ஈ). பாலை நிலத்தின் வெம்மையைக் கலிங்கத்துப் பரணி எவ்வாறு வருணித்துள்ளது?

**6. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. (8)**

அ). திரு.வி.க வின் எழுத்துப்பணியை விளக்குக.

ஆ). தாய்மொழி வளர்ச்சி பற்றி மு.வ. கூறும் அறிவுரை யாது

இ). கண்ணதாசனின் வாழ்வியல் சிந்தனையை விளக்குக.